# மாவட்ட சட்ட பணிகள்ஆணைக்குழு, தேனி

ADR கட்டிடம், மாவட்ட நீதிமன்ற வளாகம், தேனி 625 523

தொலை பேசி 04546 291566, thenidlsa@gmail.com

---

## அறிவிப்பு எண் 3/2024

மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு, தேனி மற்றும் வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு, பெரியகுளம், உத்தமபாளையம், ஆண்டிபட்டி, மற்றும் போடிநாயக்கனூர் ஆகியவற்றிற்கு சட்ட துணை தன்னார்வலர்களாக பணிப்புரிய தேனி மாவட்டத்தில் குடியிருக்கும் விண்ணப்பத்தாரர்கள் வரவேற்கப்படுகிறது. மேற்கண்ட சட்ட பணிக்குழுவில் காலியாக உள்ள சட்ட துணைதன்னார்வலர்களுக்கான பணியிடங்கள் கீழ் உள்ளவாறு:-

| பதவியின் பெயர் | பணிபுரியும் நிறுவனத்தின் பெயர் | பணியிடங்கள் |
|---|---|---|
| சட்ட துணைதன்னார்வலர் | மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு, தேனி | 18 |
| | வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு, பெரியகுளம் | 8 |
| | வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு, உத்தமபாளையம் | 8 |
| | வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு, ஆண்டிபட்டி | 8 |
| | வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு, போடிநாயக்கனூர் | 8 |
| | மொத்தம் | 50 |

D-No:- 969/24

20/05/24

## முக்கியதேதிகள்

| | |
|---|---|
| அறிவிக்கை விடப்பட்ட தேதி | 20.05.2024 |
| விண்ணப்பம் சமர்ப்பிக்ககடைசிதேதி | 27.05.2024 |

சட்ட துணைதன்னார்வலர்களுக்கான விண்ணப்பதாரர்கள் கீழ்கண்ட தகுதிகளை கொண்டிருக்க வேண்டும்.

## தகுதி:-

1. விண்ணப்பதாரர் இந்திய குடிமகனாகவும், தேனி மாவட்டத்தில் குடியிருப்பு கொண்டவராகவும் இருக்க வேண்டும்.
2. குறைந்தப்பட்சம் 10ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றும், தமிழ் மொழியில் சரளமாக எழுதவும் பேசவும் அறிவிக்கை தேதியன்று தெரிந்து இருக்க வேண்டும்.
3. அறிவிக்கை தேதியன்று 21 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

## தகுதியின்மை:-

விண்ணப்பதாரர் தேர்வு செய்யப்பட்ட பிறகு கீழ்கண்ட விவரங்கள் தெரியவந்தால் அவர் அந்த பதவியிலிருந்து தகுதியின்மை செய்யப்படுவதுடன் நீக்கம் செய்யப்படும்.

1. சட்ட உதவி திட்டத்திற்கு ஆர்வம் இன்றி இருந்தல்.
2. குற்றவழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவராக இருத்தல்.
3. போதிய மனவளச்சி இல்லாது இருந்தல்.
4. அரசியல் கட்சிகளில் முழுநேரம் ஈடுபாடு உள்ளவராக இருத்தல் கூடாது.

**பொதுதகவல்கள்:-**

1. விண்ணப்பதாரர் கொடுக்கப்படும் பணியினை முழு ஈடுபாட்டுடன் செய்பவராக இருக்க வேண்டும்.

2. விண்ணப்பதாரர் சமூதாயத்தில் ஒதுக்கப்பட்ட பலவீனமான அடித்தட்டு மக்களுக்கு சேவை புரியும் மனநிலை கொண்டவராக இருத்தல் குறிப்பாக வருமானத்தை எதிர்பார்க்காமல் சேவை மட்டுமேநோக்கமாக இருக்கவேண்டும்.

**ஊதியம்:-**

சட்ட துணைதன்னார்வலர் பதவிக்குஊதியம் /கூலி என தனியாக எதும் தரப்பட மாட்டாது. மாவட்டசட்டப்பணிஆணைக்குழு, தேனி அவ்வபோது உள்ள விதி ஆணைப்படி செய்யப்படும் பணிக்கு ஏற்ற மதிப்பூதியம் வழங்கப்படும்.

**விண்ணப்பக்கும் முறை:-**

விண்ணப்பதாரர்கள் இந்த அறிவிக்கையுடன் இணைக்கப்பட்ட விண்ணப்பபடிவத் பயன்படுத்திக் கொள்ளலாம். விண்ணப்பத்துடன் கல்விசான்றிதழ், பாஸ்போட் சைஸ் போட்டோ-2, சுயசான்றொப்பம் செய்து இணைத்து விண்ணப்பத்தை தபால் மூலம் மட்டுமே அனுப்ப வேண்டும்.

**தேர்வு செய்யும் முறை:-**

1. தகுதியுள்ள விண்ணப்பபரிசீலனை செய்யப்பட்டு விண்ணப்பதாரர்கள் நேர்முக தேர்வுக்காக தேர்வுக்குழுவினால் அழைக்கப்படுவார்கள். தேர்வு குழுவின் முடிவே இறுதியானது.

2. சட்ட துணைதன்னார்வலர் தேர்வு குறித்து ஏற்படும் ஆட்சேபனைக்கும், தேனி சட்ட பணி ஆணைகுழுவின் தலைவரின் முடிவே இறுதியானது மற்றும்அனைவரையும் கட்டுப்படுத்த கூடியது.
3. நேர்முகதேர்விற்கு வரும் விண்ணப்பத்தாரருக்கு பஞ்சப்படி/பயணப்படிஏதும் வழங்கப்படமாட்டாது.
4. விண்ணப்பத்தாரர்கள் தவறான தகவல் கொடுத்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

5. இப்பதவிக்காக நேர்முகமாகவும் மற்றும் மறைமுகமாகவும் அணுகும் விண்ணப்பத்தார் தகுதிநீக்கம் செய்யப்படுவார்.

THENI DISTRICT LEGAL SERVICES AUTHORITY
ACCESS TO JUSTICE FOR ALL

பயிற்சி:-

சட்ட துணைதன்னார்வலர் தேர்வு செய்யப்பட்டவர்கள் தேனி மாவட்ட சட்ட பணிஆணைக்குழுநடத்தும் பயிற்சிவகுப்புகளில் கலந்துக்கொள்ளவேண்டும்,

**விண்ணப்பசமர்ப்பித்தல்:-**

1.சட்ட துணைதன்னார்வலர் பதவிக்கானவிண்ணப்பம் 27.05.2024 மாலை 5.00 மணிக்குள் அன்றோ அதற்கு முன்னதாகவோ**"தலைவர், மாவட்ட சட்ட பணிஆணைக்குழு, ADR மையம், மாவட்டநீதிமன்றவளாகம்,இலட்சுமிபுரம், தேனி -625 523"** என்ற முகவரிக்கு வந்தடைய வேண்டும்.

2.விண்ணப்பத்தாரர்கள் தங்கள் கைபேசி அல்லது தொடர்பு கொள்ள வேண்டிய எண் தெளிவாக இருக்க வேண்டும்.

3.குறைபாடுவுடைய விண்ணப்பம் எவ்வித காரணமின்றி நிராகரிக்கப்படும்.

4.கடைசி தேதிக்கு பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**(Sd/-K.அறிவொளி)**
தலைவர் /மாவட்டநீதிபதி,
மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு,
தேனி

//உத்தரவுப்படி//

சார்பு நீதிபதி/செயலாளர்(FAC)
மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு,
தேனி

நகல்:-

1.தலைவர், வட்டசட்டப்பணிகள் ஆணைக்குழு, பெரியகுளம், உத்தமபாளையம், ஆண்டிபட்டி, மற்றும் போடிநாயக்கனூர்,
2. மாவட்ட ஊராட்சி செயலர், தேனி
3.மாவட்ட நீதிமன்ற அறிவிப்பு பலகை
4. தலைவர், வட்டசட்டப்பணிகள் ஆணைக்குழுஅறிவிப்பு பலகை

# <u>சட்ட துணைதன்னார்வலர்களுக்கான விண்ணப்பம்</u>

1. பெயர் :

2. தகப்பனார் /கனவர் பெயர் :

3. பிறந்ததேதி/வயது :

4. கல்வி தகுதி :

5. மதம் / இனம் :

6. முகவரிமற்றும் :

(தொடர்பு கொள்ளதொலைபேசிஎண்)

7. கூடுதல் தகுதிகள் :

8. பணிபுரியவிரும்பும் இடம் :

(மாவட்டஅளவில் /தாலுக்காஅளவில்

9. முன் அனுபவம் :

தேனி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு
न्याय सब के लिए
ACCESS TO JUSTICE FOR ALL
THENI DISTRICT LEGAL SERVICES AUTHORITY

## <u>உறுதிமொழி</u>

இந்த விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விவரங்கள் எனக்கு தெரிந்தவரை உண்மை. இதில் ஏதேனும் தவறு என கண்டறியப்பட்டால், பணியிலிருந்து தகுதியற்றவர் என நீக்கம் செய்யப்படுவேன் எனதெரிவித்துக் கொள்கிறேன்.

நாள்: (விண்ணப்பதாரரின் கையொப்பம்)

இடம்:

<u>குறிப்பு</u>

1. பாஸ்போர்ட் புகைபடம்.

2. கல்வி சான்றிதழ்களின் நகல்கள்( சுயசான்றொப்பம்).

3. குறைந்தபட்சமாக 10 வகுப்பு படித்து முடித்து இருக்க வேண்டும்,

4. தகுதியுள்ள தேர்ந்தெடுக்ப்படும் விண்ணப்பதாரருக்கு சட்டபணிக்குழுவில் செய்யப்படும் பணிக்கு மதிப்பூதியம்( Honorarium) தவிர சம்பளம் ஏதுவும் தரப்படமாட்டாது.

5. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் நேர்முகதேர்வுக்கு அழைக்கப்படுவார்கள் அப்போது அசல் சான்றிதழ்களுடன் வரவேண்டும்

<u>நிபந்தனைகள்</u>

1. குற்றவழக்கில் தொடர்புடையவராக இருக்கக்கூடாது.

2. பொது நலனுக்கு இடையூறு செய்பவராக இருக்கக் கூடாது.

3. அரசியல் கட்சிகளில் முழுநேரம் இடுபாடு உள்ளவராக இருக்கக்கூடாது.

4.கொடுக்கப்படும் பணியினை செய்ய மனரீதியாகவோ, உடல் ரீதியாகவோ குறைபாடு கொண்டவராக இருக்கக்கூடாது.

5.நொடிப்பு அல்லது திவாலானவர் என நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டவராகவோ இருக்கக்கூடாது.